

திருப்பெரும்புதூர் தொகுதிக்குட்பட்ட செரப்பணஞ்சேரி ஊராட்சி நாவலூர் கிராமத்தில், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை, தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் சார்பில் ரூ.180 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள சமுதாய நலக்கூடத்தை குறு,சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் திறந்து வைத்தார். உடன் திருப்பெரும்புதூர் சட்டமன்ற உறுப்பினர் கு.செல்வப்பெருந்தகை, ஒன்றியச் செயலாளர்கள் எஸ்.டி.கருணாநிதி, ந.கோபால் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளனர்.

### புனித தோமையார் மலையில் ரூ.35.45 கோடியில்

# முன்னாள் படை வீரர்கள் தங்குவதற்கான விடுதி - பயிற்சி மையக் கட்டடம்!

## முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார்!

சென்னை, மார்ச் 13-

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் 11.3.2026 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழ்நாட்டைசேர்ந்த முன்னாள் படைவீரர்கள் வசதிக்காக செங்கல்பட்டு மாவட்டம், புனித தோமையார் மலையில் 59,600 சதுர அடி பரப்பளவில் 35 கோடியே 45 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் உள் கட்டமைப்புடன் கூடிய முன்னாள் படைவீரர்கள் தங்கும் விடுதி மற்றும் பயிற்சி மையக் கட்டடம் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டினார்.

முதலமைச்சர் அவர்கள் 15.08.2025 அன்று ஆற்றிய சுதந்திர தின விழா உரையில், தமிழ்நாட்டைச் சேர்ந்த முன்னாள் படை வீரர்கள் வசதிக்காக சென்னையில் உள்கட்டமைப்புடன் கூடிய முன்னாள் படை வீரர்கள் தங்கும் விடுதி கட்டப்படும் என்று அறிவித்தார்.

அந்த அறிவிப்பினை தொடர்ந்து, தமிழ்நாட்டைச் சார்ந்த சுமார் 1,84,000 முன்னாள் படைவீரர்களில் 5,000க்கு மேற்பட்டோர் சென்னையில் பணிபுரிவதை கருத்திற்கொண்டும், தமிழ்நாடு முன்னாள் படைவீரர் கழகம் மற்றும் முன்னாள் படைவீரர் நலத்துறையின் சார்பில் சென்னையில் பணிபுரியும் மற்றும் வெளி மாவட்டங்களிலிருந்து சென்னைக்கு வருகை தரும் முன்னாள் படைவீரர்கள் தங்கி பயனடையும் வகையிலும் செங்கல்பட்டு மாவட்டம், புனித தோமையார் மலையில் 35 கோடியே 45 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 59,600 சதுர அடி பரப்பில் தரை (Stilt Floor) மற்றும் மூன்று மேல்தளங்களுடன் கட்டப்படவுள்ள முன்னாள் படைவீரர் விடுதி மற்றும்பயிற்சிமையத்திற்கு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

இவ்விடுதிக் கட்டடம் மொத்தம் 80 அறைகள் மற்றும் 216 படுக்கை வசதிகளுடன், அலுவலகம், பல்நோக்கு அறை, உடற்பயிற்சிக் கூடம் மற்றும் கூட்ட அரங்கம் ஆகியவற்றுடன் மூன்று மின்தூக்கிகள், வாகனங்கள் நிறுத்தும் வசதி உள்ளிட்ட பல்வேறு வசதிகளுடன் தமிழ்நாடு காவலர் வீட்டுவசதி கழகத்தால் கட்டப்பட இருக்கிறது. சென்னையில் முன்னாள் படைவீரர்களுக்கு தங்கும் விடுதி கட்டுவதன் மூலம் இங்கு தங்கி பணிபுரியும் முன்னாள் படைவீரர்களும் மற்றும் அலுவல் நிமித்தமாக பல்வேறு மாவட்டங்களிலிருந்து சென்னைக்கு வரும் முன்னாள் படைவீரர்களும் பயனடைவார்கள்

இந்த நிகழ்ச்சியில், மனிதவள மேலாண்மைத்துறை மற்றும் முன்னாள் படைவீரர் நலத்துறை அமைச்சர் திருமதி கயல்விழி செல்வராஜ், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், பொதுத்துறை முதன்மைச் செயலாளர் திருமதி ரீட்டா ஹரீஷ் தக்கர், அரசு கூடுதல் செயலாளர் மற்றும் முன்னாள் படைவீரர் நலத்துறை இயக்குநர் திகி. பாலசுப்பிரமணியம், தமிழ்நாடு காவலர் வீட்டுவசதி கழகத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் வினித்தேவ் வான்கேடே, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

### DGCA வில் காலிப்பணியிடங்களை நிரப்பாமல் தொடர்ந்து அலட்சியம்!

# விமானப் பயணிகளின் பாதுகாப்புடன் விளையாடும் ஒன்றிய அரசு!

## கே.இ. பிரகாஷ் எம்.பி. கண்டனம்!

புதுடெல்லி, மார்ச் 13

இந்திய விமானப் போக்குவரத்து ஒழுங்குமுறை ஆணையமான DGCAவில் 50%க்கும் அதிகமான பணியிடங்கள் நிரப்பப்படாமல் இருப்பதாக நாடாளுமன்ற நிலைக்குழு கடந்த ஆண்டு எச்சரிக்கை விடுத்தது.

இப்போது அந்த அறிக்கை வெளியாகி பல மாதங்கள் கடந்துவிட்ட நிலையில், DGCA காலிப்பணியிடங்களை நிரப்ப என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது என்று, நாடாளுமன்றத்தில் விமானப் போக்குவரத்து அமைச்சகத்திடம் கே.இ.பிரகாஷ் கேள்வி எழுப்பினார். இதில், இந்த விவகாரம் உருவாக்கியிருக்கும் சூழல் பற்றி ஆய்வு செய்யப்பட்டுள்ளதா, காலிப்பணியிடங்கள் எப்போதுக்குள் நிரப்பப்படும் என்று ஈரோடு கே.இ.பிரகாஷ் கேள்வி எழுப்பினார்.



ஆனால், விமானப் போக்குவரத்து அமைச்சகத்திடம் இருந்து கிடைத்துள்ள பதில்கள், ஒன்றிய அரசுக்கு விமானப் பயணிகளின் பாதுகாப்பில் சிறு அக்கறையும் இல்லை என்பதை தெளிவாக்கியுள்ளது.

1. காலிப்பணியிடங்கள் குறித்த விவரங்களை மறைக்கும் மோசடிச் செயல்:

நாடாளுமன்ற நிலைக்குழு தனது அறிக்கையில், DGCAவில் பல தளங்களில் 50%க்கும் அதிகமான காலிப்பணியிடங்கள் இருப்பதை மிகமுக்கியமாக குறிப்பிட்டது. இந்த நாடாளுமன்ற நிலைக்குழு என்பது வெளிப்புற அமைப்பு கிடையாது. அரசியலமைப்புப் படி, சட்டப்பூர்வமான அதிகாரத்துடன் இயங்கும் அமைப்பு. இதன் தகவலுக்கு மிக மிக நம்பகத்தன்மை உண்டு.

ஆனால், தற்போது ஒன்றிய அரசு அளித்திருக்கும் பதிலில், இந்த காலிப்பணியிடங்கள் பற்றிய உண்மையை அப்பட்டமாக மூடிமறைக்க முயற்சி செய்துள்ளது. இதற்குப் பதிலாக, புதிதாக உருவாக்கப்பட்ட பணியிடங்களின் விவரங்களைக் குறிப்பிட்டு, இதனால் தான் இந்த எண்ணிக்கை அதிகமாக தெரிகிறது என்பது போன்ற தோற்றத்தை உருவாக்க எத்தனித்துள்ளது.

விஷயம் இப்போது வரை மொத்தமாக எத்தனை காலிப்பணியிடங்கள் என்பதும், அவற்றை ஏன் இன்னும் நிரப்பவில்லை என்பதுமே. ஆனால், இதற்குப் பதிலளிக்க மறுத்து மோசடிச் செயலை செய்துள்ளது ஒன்றிய அரசு.

2. ஆமை வேகத்தில் நடக்கும் பணி நியமனங்கள்:

ஒன்றிய அரசு தனது பதிலில், 36 தொழில்நுட்ப அதிகாரிகள் பணியில் சேர்ந்துவிட்டார்கள், 106 பேருக்கு பணிநியமன ஆணை வழங்கப்பட்டிருக்கிறது, 58 பேர் பரிசீலனையில் இருக்கிறார்கள் என்ற உதிரித்தகவல்களை மட்டுமே கொடுத்துள்ளது. மேலும், பற்றாக்குறையை சமாளிக்க தற்காலிகப் பணியாளர்களும் எடுக்கப்பட்டு வருகிறார்கள் என்று கூறியுள்ளது.

உதிரித்தகவல்களை வைத்து DGCAமிகப்பெரிய பணியாளர்கள் பற்றாக்குறை விகிதத்தை எப்படி சமப்படுத்திக் கொள்வது? மேலும், விமானப் போக்குவரத்தை ஒழுங்குப்படுத்தும் ஒரு நிபுணத்துவ அமைப்பில், தற்காலிகப் பணியாளர்களின் நியமனத்தை எப்படி எடுத்துக் கொள்வது?

ஒன்றிய அரசின் இந்த கணக்கு, தனது மெத்தனமான நிர்வாகத்தையும் மக்களின் மீதான அக்கறையின்மையையும் மறைக்கும், வெற்று புள்ளிவிவரத் திரை மட்டுமே.

3. விமானப் பயணிகளின் பாதுகாப்பிற்கு எந்த அச்சுறுத்தலும் இல்லை என பச்சைப்பொய்:

தனது பதிலில் இறுதியாக, 'இந்த பணியாளர்கள் பற்றாக்குறையால் விமானப் பயணிகளுக்கு எந்த பாதிப்பும் இல்லை' என பச்சைப்பொய் கூறியுள்ளது ஒன்றிய அரசு. நாடாளுமன்ற நிலைக்குழு முதல் விமானப் போக்குவரத்து வல்லுநர்கள் வரை இது உருவாக்கும் அபாயங்களை வலுவாக உணர்த்தியுள்ளார்கள்.

போதிய அதிகாரிகள் இல்லாததால், Airworthiness எனப்படும் விமானங்களின் தரம் பற்றிய ஆய்வுகள் மேலோட்டமாக செய்யப்படுகின்றன. இதனால், வானில் இயந்திரக் கோளாறுகள் ஏற்பட்டு விமானம் செயலிழக்கும் அபாயம் உள்ளது. இதைக் கடந்து, அதிகப்படியான பணிச்சுமையால் நிகழும் மனிதத்தவறுகள், விமான நிறுவனங்களின் விதிமீறல்களை கண்டறிவதில் சுணக்கம் என, அபாயங்களின் பட்டியல் நீண்டு கொண்டே செல்கிறது.

இப்படியொரு சூழலில், "எந்தப் பாதிப்பும் இல்லை" என்று ஒன்றிய அரசு நாடாளுமன்றத்திலேயே கூறுவது, அவர்களுக்கு பொறுப்பேற்கும் தன்மை துளியும் இல்லை என்பதையே காட்டுகிறது.

DGCA என்பது விமானப்போக்குவரத்தின்ஏதோ ஒரு அமைப்பு அல்ல. அது தான் இதயம். அதிலேயே இத்தனை துளைகளை சரி செய்யாமல் வைத்துக் கொண்டு, ஒன்றிய அரசு இவ்வளவு அலட்சியமாக இருப்பது ஏற்புடையது அல்ல. மிக விரைவாக, அதில் நிலவும் பணியாளர்கள் பற்றாக்குறை உள்ளிட்ட சிக்கல்கள் தீர்க்கப்பட்டு, விமானப்பயணிகளுக்கு பாதுகாப்பான சூழலை ஒன்றிய அரசு ஏற்படுத்த வேண்டும்.

இவ்வாறு கே.இ. பிரகாஷ் எம்.பி. தெரிவித்துள்ளார்.



திருவள்ளூர் மத்திய மாவட்ட இலக்கிய அணி துணை அமைப்பாளர் பாக்கம் கு.கருணாகரன் அவரது திருவுருவப்படத்தை ஒன்றிய கழகச் செயலாளர் சே.பிரேம் ஆனந்த் தலைமையில் மாவட்ட கழகச் செயலாளர் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் திறந்து வைத்து மரியாதை செலுத்தினார். இதில் ஆ.கிருஷ்ணசாமிஎம்.எல்.ஏ, கே.ஜெ.ரமேஷ், காயத்திரி ஸ்ரீதர், பா.நரேஷ்குமார், டி.முரளிகிருஷ்ணன், ஆர். ஜெயசீலன், ஜி.விமல் வர்ஷன், ஆர்.எஸ்.ராஜராஜன், தமிழ்வாணன், நரேஷ்பாபு, எஸ்.சாந்தனு, ஞா.ரமேஷ், பால விநாயகம், சிவ. அருணகிரி, ப.குமரேசன்,டி.தென்னவன், கபிலன், புன்னை குமார், புட்லூர் ராமச்சந்திரன், வ.ஹரி, கசுவ ஆர்.ராஜி, கே.அன்பு, திருமால், ஜெ.ஹரி, கிருஷ்ணன், பார்த்திபன், கார்த்திக், ராஜசேகர், ராமன், வேதாச்சலம், எம்.ராஜா, பி.ரமேஷ், பா.ஆதவன், ஜெயபால், தசரதன், சிவாக்குமார், ராஜேஷ், பரமேஸ்வரன், முருகேசன், மகேந்திரன், திராவிடமணி, பாண்டியராஜன், எல்.பி.எஃ. முருகன், சரவணன், தனேஷ்வரன், கே.தர்னிஷ்கரன், கே.லிங்கேஸ்வர், கே.விக்னேஷ்வர் உள்பட பலர் உள்ளனர்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் 11.3.2026 அன்று தலைமைச் செயலகத்தில், செய்தி மக்கள் தொடர்புத் துறையின் 'தமிழரசு' சார்பில் தயாரிக்கப்பட்ட தமிழ்நாடு அரசின் ஐந்து ஆண்டு கால சாதனைகளை விளக்கும் "மக்கள் பணியில் மகத்தான 5 ஆண்டுகள் (202126) சாதனை மலரினை வெளியிட்டார். இந்நிகழ்வின்போது, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், முதலமைச்சரின் முதன்மைச் செயலாளர் முனைவர் ம.சு. சண்முகம், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் வே.ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு.இரா.வைத்திநாதன், தமிழ் இணையக் கல்விக் கழகத்தின் இயக்குநர் (பொறுப்பு) ரெ. கோமகன் ஆகியோர் உடனிருந்தனர்.

### 'தமிழரசு' சார்பில் தயாரிக்கப்பட்ட

# "மக்கள் பணியில் மகத்தான 5 ஆண்டுகள்" சாதனை மலர்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டார்!

**சென்னை, மார்ச் 13 -**

**முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் 11.3.2026 அன்று தலைமைச் செயலகத்தில், செய்தி மக்கள் தொடர்புத் துறையின் 'தமிழரசு' சார்பில் தயாரிக்கப்பட்ட தமிழ்நாடு அரசின் ஐந்து ஆண்டு கால சாதனைகளை விளக்கும் "மக்கள் பணியில் மகத்தான 5 ஆண்டுகள் (2021-26)" சாதனை மலரினை வெளியிட்டார்.**

முதலமைச்சராக மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான அரசு பொறுப்பேற்ற மே 2021ஆம் ஆண்டு முதல் மாநிலத்தின் அனைத்து தரப்பு மக்களும் பயன் பெறத்தக்க வகையில், கலைஞர் மகளிர் உரிமைத் தொகை, மகளிர் விடியல் பயணம், உங்களுடன் ஸ்டாலின், நலம் காக்கும் ஸ்டாலின், உங்க கனவ சொல்லுங்க, முதலமைச்சரின் தாயுமானவர் திட்டம், அன்புக்கரங்கள், காக்கும் கரங்கள், அன்புச் சோலை, நான் முதல்வன், புதுமைப் பெண், தமிழ்ப்புதல்வன், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், "உலகம் உங்கள் கையில்" மாணவர்களுக்கு மடிக்கணினி வழங்கும் திட்டம், மக்களைத்தேடி மருத்துவம், மக்களுடன் முதல்வர், இன்னுயிர் காப்போம் நம்மைக் காக்கும் 48, பணிபுரியும் மகளிருக்கான தோழி விடுதி, இல்லம் தேடிக்கல்வி, ஊட்டச் சத்தை உறுதி செய், முதலமைச்சரின் மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம் திட்டம், முதல்வர் மருந்தகம் போன்ற எண்ணற்ற மக்கள் நலத்திட்டங்களை செயல்படுத்தி இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக தமிழ்நாடு முன்னேற்றப் பாதையில் வளர்ச்சியடைந்து வருகிறது.

முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான தமிழ்நாடு அரசு ஐந்தாண்டு நிறைவடைந்ததை யொட்டி, கடந்த ஐந்தாண்டு காலத்தில் நிறைவேற்றப்பட்ட திட்டங்களைத் துறை வாரியாகத் தொகுத்து, தமிழ்நாடு அரசு, செய்தி மக்கள் தொடர்புத் துறையின் கீழ் இயங்கும் 'தமிழரசு' சார்பில் "மக்கள் பணியில் மகத்தான 5 ஆண்டுகள் (2021-26)" என்ற ஐந்தாண்டு சாதனை மலர் தயாரிக்கப்பட்டுள்ளது.

இச்சாதனை மலரில் பல்வேறு முக்கிய பிரமுகர்களின் கட்டுரைகளான உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் தலைவர் ஆர்.பாலகிருஷ்ணன், இ.ஆ.ப., அவர்கள் எழுதிய "தமிழர் வரலாற்றில் ஒரு திருப்புமுனை", புலவர் முத்துவாவாசி அவர்கள் எழுதிய "நீதிக்கட்சிக் காலம் முதல் நீண்டுவரும் திராவிட இயக்கத்தன் மானத் தமிழ்ச் சங்கிலி", ஊடகவியலாளர் மூ.அப்பணசாமி அவர்கள் எழுதிய "நகர்ப்புற வளர்ச்சிக்கு இணையான சமச்சீர் ஊரக வளர்ச்சி", மூத்த பத்திரிகையாளர் எம்.ரமேஷ் அவர்கள் எழுதிய "பொருளாதார வளர்ச்சியில் முதலிடம்", எழுத்தாளர் மற்றும் இயக்குநர் ஸ்ரீராம் சர்மா அவர்கள் எழுதிய "புண்ணியம் செய்வார்க்கு பூ உள (இந்து சமய அறநிலையத்துறை)" போன்ற கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன.

மேலும், மாவட்ட வருவாய் அலுவலர் அரவிந்தன் அவர்கள் எழுதிய "குறையொன்றுமில்லை (முதல்வரின் முகவரி)", எழுத்தாளர், சிறப்புக் கல்வியாளர், குழந்தைகள் நல உளவியாளர் திருமதி இலட்சுமி பாலகிருஷ்ணன் அவர்கள் எழுதிய "மாற்றுத் திறனாளிகளின் மனம் குளிர்விக்கும் அரசு", தமிழ் முதுகலை மற்றும் உயராய்வுத்துறை உதவி பேராசிரியர் முனைவர் ந.கவிதா அவர்கள் எழுதிய "பெண்மை வெல்க என்று கூத்திடுவோம்" என்ற கட்டுரைகளும் இடம் பெற்றுள்ளன.

தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் கழக முதன்மை ஒருங்கிணைப்புப் பதிப்பாசிரியர் முனைவர் தி. பரமேசுவரி அவர்கள் எழுதிய "நிற்க அதற்கு தக (பள்ளிக் கல்வித்துறை)", தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழக எழுத்தாளர் வெற்றிச்செல்வன் அவர்கள் எழுதிய "இந்தியாவிற்கு முன்னோடியான திராவிட மாடல் அரசின் திட்டங்கள்", வழக்கறிஞர் திருமதி மதிவதனி அவர்கள் எழுதிய "கொள்கை வழி அரசு", ஊடகவியலாளர் இந்திரகுமார் தேரடி அவர்கள் எழுதிய "இளைஞர் ஏக்கம் உடைத்து ஊக்கம் படைத்த திராவிட மாடல்", எழுத்தாளர் (விளையாட்டு) தினேஷ் அகிரா அவர்கள் எழுதிய "விளையாட்டிலும் சமூக நீதி: எல்லாருக்கும் எல்லாம்", நாவலாசிரியர் சிவக்குமார் முத்தையா அவர்கள் எழுதிய "சமூக நீதியின் சாதனைகள்" ஆகிய கட்டுரைகளும் மற்றும் தமிழ்நாடு அரசின் அனைத்து துறைகளின் சாதனைகள், மக்கள் நலத்திட்டங்கள், திட்டங்களின் பயன்களும் இம்மலரில் இடம்பெற்றுள்ளன.

இந்நிகழ்ச்சியில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், முதலமைச்சரின் முதன்மைச் செயலாளர் முனைவர் ம.சு.சண்முகம், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் வே.ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு. இரா.வைத்திநாதன், தமிழ் இணையக் கல்விக் கழகத்தின் இயக்குநர் (பொறுப்பு) ரெ. கோமகன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### கடம்பத்தூர் முன்னாள் தி.மு.க.

# ஒன்றிய கவுன்சிலர் கே.எல்லப்பா படத்திறப்பு விழா!

## வி.ஜி.ராஜேந்திரன் எம்.எல்.ஏ. திறந்து வைத்தார்!

திருவள்ளூர், மார்ச் 13:-

திருவள்ளூர் மேற்கு மாவட்டம் கடம்பத்தூர் கிழக்கு ஒன்றியம் திருவள்ளூர் அடுத்த வெங்கத்தூர் கண்டிகை கிராமத்தைச் சேர்ந்த முன்னாள் திமுக கவுன்சிலரும், மாவட்ட வர்த்தக அணி துணைத் தலைவருமான கே.எல்லப்பா வயது மூப்பு காரணமாக கடந்த மாதம் 25 ம் தேதி காலமானார்.

இதனைத் தொடர்ந்து 16 ம் நாள் நினைவஞ்சலி மற்றும் படத்திறப்பு விழா நடைபெற்றது. விழாவிற்கு மாவட்ட வர்த்தக அணி துணை அமைப்பாளர் பி. ஆர்.பிரபாகரன், இ.முருகன், இ.சீனிவாசன், அண்ணாமலை ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

திருவள்ளூர் தொகுதி சட்ட மன்ற உறுப்பினர் வி.ஜி.ராஜேந்திரன் திருவுருவப் படத்தை திறந்து வைத்து மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

இதில் மாவட்ட அவைத் தலைவர் கே.திராவிட பக்தன், ஒன்றிய செயலாளர்கள் அரிகிருஷ்ணன், பிரகாஷ் ஞான ஒலி, மாவட்ட விவசாய தொழிலாளர் அணி அமைப்பாளர் தாடி நந்தகோபால், மாவட்ட துணை அமைப்பாளர் புட்லூர் ராஜேந்திரகுமார், ஒன்றிய நிர்வாகிகள் சி. ஆர்.குமரன், கொப்பூர் திலீப்குமார், ராம்கி, மண்புகழ் மனோகரன், பெரிய சாமி, பாலசுப்பிரமணியம், ஜானகிராமன், ராம்தாஸ், ஜெய்பிரகாஷ், பாபு, பிரகாஷ், பழனி, சதீஷ், ஞான பிரகாஷ், அன்பழகன், ராஜேஷ், ஜான்பாஸ்கர், நரசிம்மன், வாட்டர் கார்த்திக், கணேசன், திருநாவுக்கரசு, முரளி, பி.அவினாஷ், பி.அஷ்வத், வி.புவனேஷ், நவின், சங்கர், வாசுதேவன், ஜோதிலிங்கம், உமாசங்கர், முரளி கிருஷ்ணன், கோவிந்தன், காசிலிங்கம், ரமேஷ், மாரி முத்து, குணசேகரன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### கழகத் தலைவர் முதல்வர் பிறந்த நாள்!

# 61வது வட்டத்தில் 500 பேருக்கு அறுசுவை மதிய உணவு!

## இ.பரந்தாமன் எம்.எல்.ஏ. வழங்கினார்!

மாதவரம், மார்ச் 13-

கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 73ஆவது பிறந்த நாளை முன்னிட்டு கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன் ஏற்பாட்டில், எழும்பூர் தொகுதியில் பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கிடும் வகையில் 12 தொடர் நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

இதன் ஒரு பகுதியாக, 61வது வட்டம், எழும்பூர் நெடுஞ்சாலையிலுள்ள அரசு மாதிரி மகளிர் மேல் நிலைப்பள்ளி எதிரில் நடந்த நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன் அப்பகுதியைச் சேர்ந்த 500 பேருக்கு அறுசுவை மதிய உணவு வழங்கினார்.

இந்நிகழ்வில் அவைத் தலைவர் வெ.மருதன், எழும்பூர் தெற்குப் பகுதி முன்னாள் வர்த்தகர் அணி அமைப்பாளர் ரா.வெற்றிவேல், எழும்பூர் தெற்குப் பகுதி இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் ஜெ.சிலம்பரசன், எல்.சுகுமாறன்; 108 'அ' வட்ட இளைஞரணி அமைப்பாளர் பு.சதிஷ்குமார், எழும்பூர் கோ.சுந்தர்ராஜ், எஸ். கமல், ஆர்.கணேசன், எம். வேலு, எஸ்.நரேஷ், எம். ரமேஷ், ஏ.சங்கர், பிரகாஷ், ஜி.ராம், முரளி, டில்லி, 61வது வட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் ர.நித்திஷ் கிரிதரன், 108 'அ' வட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் சூர்யா, மற்றும் ரோஷன், எஸ். சுபத்ரா, ராணி, சித்ரா, ஷர்மி, காந்தமணி, ஈஸ்வரி, பஞ்சாலை, சுந்தரம்மாள், பார்வதி உள்ளிட்ட கழக நிர்வாகிகளும், அணிகளின் அமைப்பாளர்களும், கழகச் செயல்வீரர்களும் கலந்து கொண்டனர்.



மாதவரம் வடக்கு பகுதி 16வது வட்டம் கன்னியம்மன் பேட்டை ,சத்திரமேடு, காமராஜ்புரம் ஆகிய பகுதிகளில் வெல்லும் தமிழ் பெண்கள், மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் தலைமையிலும், வட்டச் செயலாளர் இ. கண்ணப்பன், மாவட்ட பிரதிநிதி நா. மோகன் குமார் முன்னிலையிலும் திராவிட மாடல் அரசின் சாதனைகளை வீடு வீடாக எடுத்துச் சொல்லி தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டனர். இந்த நிகழ்வில் பாக முகவர்கள் தமிழ்செல்வன், எம். கிருபாகரன், ஜி. நாகலிங்கம், கடப்பாக்கம் நீதி, எம். சுந்தர், பி. விக்னேஷ். எம் பரணிகுமார், தென்னரசு, எம். சுந்தர் உள்ளிட்ட பலர் உடன் உள்ளனர்.